பிரிவு அ : மொழியணிகள்

1. கோடிட்ட இடத்திற்கு ஏற்ற பொருத்தமான இரட்டைக்கிளவியைத் தேர்ந்தெடு.

மாட்டுக்கார வேலன் தன் காளை மாடுகளைச் சாட்டையால் _____ அடித்தான்.

A. பளீர் பளீர்

B. பளார் பளார்

C. கடு கடு

D. கிடு கிடு

2. கீழ்க்காணும் வெற்றிவேற்கையில் கோடிடப்பட்டுள்ள சொல் உணர்த்தும் பொருள் யாது?

செல்வர்க் கழகு <u>செழுங்கிளை</u> தாங்குதல்.

A. நண்பர்

B. உறவினர்

C. பகைவர்

D. அண்டை அயலார்

3. கீழ்க்காணும் சூழலுக்கேற்ற உலகநீதியைத் தெரிவு செய்க.

பூம்புகார் நகரில் வாழ்ந்து வந்த பணக்கார பொற்கொல்லன் பல செல்வங்களைத் தேடி குவித்தான். ஆனால், தனது செல்வங்கள் அனைத்தையும் பயன்படுத்தாமல் தன் தோட்டத்தில் குழி தோண்டி புதைத்து அவற்றைப் பாதுகாத்து வந்தான்.

A. மாற்றானை யுறவென்று நம்ப வேண்டாம்

B. தருமத்தை யொருநாளும் மறக்க வேண்டாம்

C. தனந்தேடி யுண்ணாமற் புதைக்க வேண்டாம்

D. மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்

4. 'வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி.....' எனும் செய்யுளின் இறுதியடியைத் தெரிவ்ய் செய்க.

A. ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்

B. கோனாகி யான் எனது என்றவரவரைக் கூத்தாட்டு

C. கோனாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

D. வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

LIVEWORKSHEETS

5. கீழ்க்காணும் குறளில் கோடிடப்பட்டுள்ள சொல்லுக்கு ஏற்ற வேறு சொல்லைத் தேர்ந்தெடு.

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த <u>உடம்பு</u>

A. எலும்பு

B. தேகம்

C. சதை

D. தோல்

6. படத்திற்கு ஏற்ற சரியான மரபுத்தொடரைத் தெரிவு செய்க.

A. கையும் களவுமாய்

B. கங்கணம் கட்டுதல்

C. கடுக்காய்க் கொடுத்தல்

D. காது குத்துதல்

7. கீழ்க்காணும் கூற்றுக்குப் பொருத்தமான உவமைத்தொடரைத் தெரிவு செய்க.

மாணவர்கள் பள்ளிப் பாடப் புத்தகங்களை மிகவும் கவனமுடன் பாதுகாக்க வேண்டும்.

A. குன்றின் மேலிட்ட விளக்கு போல

B. இலைமறை காய் போல

C. கண்ணினைக் காக்கும் இமை போல

LIVEWORKSHEETS

D. அனலில் இட்ட மெழுகு போல

8. கீழ்க்காணும் சூழலுக்கு ஏற்ற இணைமொழியைத் தெரிவு செய்க.

பெற்றோரின் _____ தெரியாத இளங்கோ அவர்களை முதியோர் இல்லத்தில் சேர்த்தான்

A. அன்றும் இன்றும்

B. அருமை பெருமை

C. பேரும் புகழும்

D. அரை குறை

9. பின்வரும் மூதுரையின் மூன்றாவது அடியைத் தெரிவு செய்க.

அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்

A. ஓடுமீ னோட உறுமீன் வருமளவும்

B. கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்

C. வாடி யிருக்குமாங் கொக்கு

D. தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்

10. கீழ்க்கண்ட சூழலுக்குப் பொருத்தமான மரபுத்தொடரைத் தெரிவு செய்க.

பரதக் கலையை நன்கு கற்றுத்தேர்ந்த மாலதி சிறந்த நாட்டியத் தாரகை என்று அனைவரின் பாராட்டையும் பெற்றாள்.

A. கை கொடுத்தல்

B. பெயர் பொறித்தல்

C. கரைத்துக் குடித்தல்

D. கை கூடுதல்

LIVEWORKSHEETS